DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 13/2025**
**P.W. 3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முனிகுமார் |
| Father's Name | : | திரு.பன்னீர்செல்வம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 30 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of July 2025.

**முதல் விசாரணை**

நான் சீகம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் பைனான்சில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 01.11.2024 ம் தேதி இரவு சுமார் 9.30 மணியளவில் நான் வேலையை முடித்துவிட்டு வந்தேன். அப்போது எனது சித்தப்பா மகன் அ.சா.1 தமிழ்செல்வன், பட்டியல் சாட்சி மார்கண்டேயன் ஆகியோருக்கும், எதிரிக்கும் இடையில் வாக்குவாதம் நடந்தது என்று கேள்விப்பட்டேன். அ.சா.1 தமிழ்செல்வன் அதுகுறித்து விலக்கச் சென்றபோது எதிரி தமிழ்செல்வனை கத்தியால் குத்தியதால் காயம்பட்டு இருந்தான். அவர் உடல் முழுவதும் காயங்கள் இருந்தது. காயம்பட்ட அ.சா.1 தமிழ்செல்வனை நான் தான் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். அவருக்கு காயங்கள் அதிகமாக இருந்ததால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

Veda

**குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோதும் சொன்னேன். காயம்பட்ட அ.சா.1 தமிழ்செல்வனை நான் தான் மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன் என்றும், அவருக்கு காயங்கள் அதிகமாக இருந்ததால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். சம்பவத்தின்போது எனக்கு வயது 29. போலிசார் விசாரித்தபோதும் அதை தான் சொன்னேன். அன்றைய தினம் அ.சா.1 தமிழ்செல்வனை எப்படி மருத்துவமனை அழைத்து சென்றேன் என்றால் ஆம்புலன்ஸ் வர தாமதமானதால் இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றேன். அப்போது எதிரில் ஆம்புலன்ஸ் வந்ததால் அதில் ஏற்றி அழைத்து சென்றேன். அது தனியார் ஆம்புலன்ஸ் ஆகும். அன்றைய தினம் அ.சா.1 தமிழ்செல்வனை நான் மட்டும் தான் இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றேன். அந்த ஆம்புலன்ஸ் எந்த இடத்தில் வந்தது என்றால் சோலைப்பட்டி பிரிவு ரோட்டில் வந்தது. அப்போதும் ஆம்புலன்ஸில் நானும், தமிழ்செல்வன் மட்டும் தான் இருந்தோம் என்றால் சரிதான். ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தேன் என்பதற்கும், உடன் சென்றேன் என்பதற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் நான் அ.சா.1 தமிழ்செல்வனை ஆம்புலன்ஸில் அனுப்பி வைத்தேன் என்று தான் சொன்னேன். உடன் சென்றதாக சொல்லவில்லை. அன்றைய தினம் அ.சா.1 தமிழ்செல்வன் என்ன சட்டை அணிந்திருந்தார் என்றால் நான் பார்க்கும்போது அவர் சட்டை அணியவில்லை. அவர் பனியன் அணிந்திருந்தரா என்றால் இல்லை. நான் பார்க்கும்போது அவர் வெறும் உடம்புடன் இருந்தார். இடுப்பில் லோயர் அணிந்திருந்தார். அவர் போட்டிருந்த லோயரில் இரத்த கறை இருந்தது. மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றபோது காயம்பட்ட நபருடன் யார் வந்திருக்கிறார்கள் என்று மருத்துவர் கேட்டார். அப்போது முனிக்குமார் என்ற முனியப்பன் ஆகிய நான் வந்துள்ளேன் என்று சொன்னேன். மணப்பாறை அரசு மருத்துவமனையில் சுமார் 20 நிமிடம் முதல் 30 நிமிடம் வரை இருந்தோம். அப்போது அவருக்கு மணப்பாறை

Vaopa

அரசு மருத்துவமனையில் தையல் போட்டார்கள். அதன்பிறகு நான் தான் அவரை சிந்துஜா தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் நானும் சென்றேன், தமிழ்செல்வன் குடும்பத்தினரும் வந்துவிட்டார்கள். அரசு மருத்துவமனையிலிருந்து சிந்துஜா மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் அழைத்து சென்றோம். அன்று இரவு முழுவதும் நான் சிந்துஜா மருத்துவமனையில் இருந்தேன். அன்று இரவே சிந்துஜா மருத்துவமனைக்கு மணப்பாறை போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அப்போது போலிசார் என்னையும், காயம்பட்ட அ.சா.1 தமிழ்செல்வனையும் விசாரணை செய்தார். அவ்வாறு விசாரணை செய்த விவரங்களை எழுதிக்கொண்டு தமிழ்செல்வனிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். அப்போது விசாரணை செய்தது தவிர என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். அதன்பிறகு மறுநாள் என்னை மணப்பாறை காவல் நிலையம் வரச்சொன்னார்கள். நான் காவல் நிலையம் சென்றபோது காலை 10.00 மணி இருக்கும். அப்போது என்னை விசாரணை செய்தார்கள். அதன்பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை எதுவும் செய்யவில்லை. எனக்கு இந்த வழக்கு சம்பந்தமாக எந்த விவரமும் தெரியாது என்றாலும், நான் காயம்பட்ட அ.சா.1 தமிழ்செல்வனை மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றாலும், அ.சா.1 எனது சித்தப்பா மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> **– இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Copy

# Web copy

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 13/2025**
**P.W. 4**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.வடிவேல் |
| Father's Name | : | திரு.அய்யாவு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 30 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of July 2025.

**முதல் விசாரணை**

நான் சீகம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் மண்வெட்டும் வேலைக்கு சென்றுவிட்டு வேலை முடித்துவிட்டு ஊரணி பஸ் ஸ்டாப்பில் நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த ஜெய்ஹிந்த் என்பவரும் வந்தபோது போலிசார் ஆஜர் எதிரியை பிடித்து வைத்திருந்தார்கள். அப்போது எங்கள் இருவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பம் **அ.த.சா.ஆ.3** ஆகும். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் **அ.த.சா.ஆ.4** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

| |
|---|
| **அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சாட்சியின் முந்தைய வாக்குமூலத்தை பரிசீலத்து பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 157-ன் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.** |

eCopy

**குறுக்கு விசாரணை(அரசு தரப்பில்)**

போலிசார் விசாரணையில் கடந்த 04.11.2024 ம் தேதி பகல் 2.00 மணியளவில் நானும், எனது நண்பர் ஜெய்ஹிந்த் என்பவரும் கோவில்பட்டி ரோடு பொன் முச்சந்தி பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த மணப்பாறை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் ஆஜர் எதிரி பழனிவேல் என்பவரை காரணம் கூறி எங்கள் முன்னிலையில் கைது செய்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதில் தன்னை கூட்டிச்சென்றால் தான் கத்தியை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார் என்றும், அதனடிப்படையில் எதிரி அன்று 15.30 மணியளவில் அவரது வீட்டின் பின்புறம் உள்ள ஆஸ்பெட்டாஸ் சீட்டிலிருந்து கத்தியை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் நானும், ஜெய்ஹிந்தும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

கடந்த வருடம் எனது வயது 29 ஆகும். போலிசார் என்னை விசாரித்தபோது மண்வெட்ட சென்ற விவரத்தை சொன்னேன். அந்த இரண்டு கையெழுத்துக்களையும் ஊரணி பஸ் ஸ்டாப்பில் வைத்து தான் கையெழுத்து போட்டேன். அன்றைய தினம் என்னிடம் முதலில் போலிசார் கையொப்பம் வாங்கினார்கள். அதன்பின்பு அருகில் போன் பேசிக்கொண்டிருந்த ஜெய்ஹிந்திடம் கையொப்பம் வாங்கினார்கள்.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 13/2025**
**P.W. 5**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஜெய்ஹிந்த் |
| Father's Name | : | திரு.ஆறுமுகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 28 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of July 2025.

**முதல் விசாரணை**

நான் உசிலம்பட்டியில் வசித்து வருகிறேன். அ.சா.*4* வடிவேலை தெரியும். நான் கேஸ் கம்பெனியில் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். தேதி சரியாக ஞாபகமில்லை. கடந்த வருடம் ஊரணி பஸ் ஸ்டாப்பில் மாலை *3.00* மணியளவில் நின்றுக்கொண்டிருந்தேன். பேக்கிரி கடைக்கு சிலிண்டர் போட வந்தபோது போலிசார் வந்து கேட்டபோது அ.சா.*4* வடிவேல் அங்கே சண்டை நடந்ததாக கூறினார். ஆஜர் எதிரியை தெரியும். அப்போது எங்கள் இருவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது கையொப்பம் **அ.த.சா.ஆ.5** ஆகும். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் **அ.த.சா.ஆ.6** ஆகும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

| |
|---|
| **அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க வேண்டுகோள் விடுக்கப்பட்டது. சாட்சியின் முந்தைய வாக்குமூலத்தை பரிசீலத்து பாரதிய சாட்சிய அதினியம் பிரிவு 157-ன் கீழ் அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.** |

apeda

**குறுக்கு விசாரணை(அரசு தரப்பில்)**

போலிசார் விசாரணையில் கடந்த 04.11.2024ம் தேதி பகல் 2.00 மணியளவில் நானும், அ.சா.4 வடிவேல் என்பவரும் கோவில்பட்டி ரோடு பொன் முச்சந்தி பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த மணப்பாறை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் ஆஜர் எதிரி பழனிவேல் என்பவரை காரணம் கூறி எங்கள் முன்னிலையில் கைது செய்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதில் தன்னை கூட்டிச்சென்றால் தான் கத்தியை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார் என்றும், அதனடிப்படையில் எதிரி அன்று 15.30 மணியளவில் அவரது வீட்டின் பின்புறம் உள்ள ஆஸ்பெட்டாஸ் சீட்டிலிருந்து கத்தியை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் நானும், வடிவேலும் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

கடந்த வருடம் எனது வயது 29 ஆகும். போலிசார் என்னை விசாரித்தபோது மண்வெட்ட சென்ற விவரத்தை சொன்னேன். அந்த இரண்டு கையெழுத்துக்களையும் ஊரணி பஸ் ஸ்டாப்பில் வைத்து தான் கையெழுத்து போட்டேன். அன்றைய தினம் என்னிடம் முதலில் போலிசார் கையொப்பம் வாங்கினார்கள். அதன்பின்பு அருகில் போன் பேசிக்கொண்டிருந்த ஜெய்ஹிந்திடம் கையொப்பம் வாங்கினார்கள்.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Copy